2 பக்கங்கள் 15 காசுகள்

தீக்கதிர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) நாளிதழ்

பதிவு எண் எம். 8798

கதிர் 12 மதுரை 26—1—75 ஞாயிறு மலர்: 325

தோழர் ஏ. கே. ஜி. கோரிக்கை

கோழிக்கோடு, ஜன. 24—

கேரள அரசு ஊழியர்கள் மற்றும், ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒருதீர்வு காண அரசுமுன்வரவேண்டும்என்றும், பிப்.5-ல் போராட்டம் நடத்தவிருக்கும் அவர்கள் மீது அடக்குமுறையை ஏவிவிடக்கூடாது என்றும் தோழர் ஏ. கே. கோபாலன் கூறியுள்ளார்.

சோவியத்துக்கு அமெரிக்கா நிபந்தனை போட்ட இரகசியம்

அமெரிக்கா, சோவியத் நாட்டுடன் வர்த்தகம் செய்ய வேண்டுமானால், சோவியத்திலிருந்து வெளியேற விரும்பும் யூதர்களை சோவியத் அரசு அனுமதிக்க வேண்டுமென்று நிபந்தனை போட்டது. முடியாது என்று சோவியத் மறுத்து விட்டது.

இராணுவத்திலும் அரசு நிருவாகத்திலும் ரகசியங்கள் தெரிந்த யூதர்களை இழுத்துக்கொள்ளவே அமெரிக்கா நிபந்தனை போட்டது.

★ காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேருவதைக் கைவிடவே மாட்டாராம்

★ ஆட்சிக் கட்டிலில் தங்களுக்கும் இடம் கொடுக்க வேண்டுமாம்

பருவாவின் பாதங்களில் பூபேஷ்குப்தா பூசை

மந்திரிப்பதவி ஆசையில் தத்துவம் படிக்கிறார்

புதுடில்லி, ஜன. 25

கேரளத்தில் காங்கிரஸ் கட்சியும் வலது கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டணி அரசு ஏற்படுத்திக்கொண்டது போல, இதர மாநிலங்களிலும் ஏற்பட வேண்டுமென்று வலது கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

ஆனால் காங்கிரஸ் தலைவர்களோ, கேரளத்தில் வர்க்கபோதமுள்ள முதற் பெரும் சக்தியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விளங்குவதால், ஆட்சிக்கு அது வந்துவிடாமல் இருப்பதற்காகவே, வலது கம்யூனிஸ்ட் கட்சியை அரவணைத்துக் கொண்டனர்; முதலமைச்சர் பீடத்திலும் அமர்த்திக்கொண்டனர்.

அதேபோன்று எல்லா மாநிலங்களிலும் தன்னை மந்திரிக் கட்டிலில் அமர்த்த வேண்டுமென்று வலது கம்யூனிஸ்டுக்கு ஆசை விரிகிறது.

ஆசை பேராசையாக விரிவதைக் கண்ட காங்கிரஸ் தலைவர் பருவா, 'கேரள நிலைமை தனி. ஆசை அத்தோடு அடங்கட்டும்"—என்று வலது கம்யூனிஸ்ட் கட்சியைத் துரத்துகிறார்.

ஆசை வெட்கம் அறியுமா? துரத்தியடித்தாலும், காங்கிரசுக்கு தொண்டு புரிவதை விடமாட்டோம் என்று வலது கம்யூனிஸ்ட் தலைவர் பூபேஷ்குப்தா கூறுகிறார்.

ஜெ. ஜீவன்ராம், சந்திரசேகர், சித்தார்த்தசங்கர்ரே, டி. கே. பருவாபோன்ற காங்கிரஸ் தலைவர்கள் வலது கம்யூனிஸ்ட் கட்சியை விரட்டுகிறார்கள்.

அண்மையில் காங்கிரஸ் தலைவர் பருவா கல்கத்தாவில் பேசும்போது, 'மேற்கு வங்கத்திலும் கேரள மாடலில் கூட்டு அரசு ஏற்படுத்திக் கொள்ளலாமென்று வலது கம்யூனிஸ்ட் கட்சி கேட்கிறது. ஆனால் காங்கிரஸ் அதை விரும்பவில்லை'—என்று பதில் அளித்தார்.

பூபேஷ்குப்தா

பருவாவின் பேச்சுக்கு வலது கம்யூனிஸ்ட் தலைவர் பூபேஷ்குப்தா பதில் அளித்து பின்வரும் அறிக்கை விடுத்துள்ளார்:

"பருவாவின் பேச்சு எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. எங்கள் கட்சியின் மேற்கு வங்க மாநில மாநாட்டில் நாங்கள் போட்டிருக்கிற தீர்மானத்தை பருவா படித்துப் பார்த்திருந்தால், அப்படி பேசியிருக்க மாட்டார். நாங்கள் காங்கிரஸ் மந்திரி சபையில் ஒரு இடம் கேட்கவில்லை. காங்கிரஸ் ஆட்சியை அகற்றி விட்டு, அந்த இடத்தில் ஒரு இடதுசாரி. ஜனநாயகஜக்கிய அரசை நிறுவவேண்டும் என்றுதீர்மானம் போட்டிருக்கிறோம்.

காங்கிரஸில் ஒரு பகுதியை இழுத்துக்கொள்ளுவோம்

"மேற்கு வங்கப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண ஒரு கட்சி காங்கிரஸ் ஆட்சியாலும் முடியாது. காங்கிரஸ் அல்லாத இடதுசாரிக் கட்சிகளைக் கொண்ட சர்க்காராலும் முடியாது. காங்கிரசுக்கு மாற்றாக ஒரு பொதுத் திட்டத்தின் அடிப்படையில் இடதுசாரி. ஜனநாயகக் கட்சிகளும், அத்துடன் காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள முற்போக்குப் பகுதியினரும் கொண்ட ஒரு கூட்டாட்சி நிறுவ வேண்டும். அப்படி நிறுவினால்தான் காங்கிரசை ஆதரிக்கும் மக்களும், இடதுசாரிக் கட்சிகளை ஆதரிக்கும் மக்களும் அந்த ஆட்சிக்கு பரந்த அளவில் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பார்கள்—என்று தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

மேலும் இடதுசாரிக் கட்சிகள் குருட்டுத்தனமாக காங்கிரசை எதிர்ப்பதைக் கைவிட வேண்டுமென்றும்—அதுபோல காங்கிரசிலுள்ள முற்போக்குப் பகுதியினர் அரசியல் அதிகாரத்தைதாங்கள் தான் ஏகபோகமாக அனுபவிக்கவேண்டுமென்ற ஆசையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறோம்"— என்றார்,

ஒன்றுகப் போட்டு குலுக்கி இரண்டாகப் பிரிப்போம்

தீர்மானத்தை பூபேஷ்குப்தா மேலும் விளக்கிக் கூறுகையில்:

"இடதுசாரி, ஜனநாயக ஒற்றுமை என்று நாங்கள் சொல்லுவதை யாருமே சரியானபடி புரிந்து கொள்ளுவதில்லை. வலதுசாரிக் கட்சிகளும், சந்தர்ப்பவத இடதுசாரிக் கட்சிகளும் எங்கள் தீர்மானத்தைப் பற்றி தப்பும் தவறுமாகக் குழப்பி விடுகிறார்கள். அதனால் தான் துரதிர்ஷ்ட வசமாககாங்கிரஸ் தலைமை குழம்புகிறது.

எங்கள் கட்சி என்ன சொல்லுகிறது என்றால், மேற்கு வங்கத்தில், மக்கள் நலனை முன்னிட்டு, எல்லா அரசியல் சக்திகளும் மறு சேர்க்கை சேருமாறு செய்ய வேண்டும் என்று சொல்லுகிறது. இதற்குப் பெயர், நாங்கள் கூட்டு சர்க்கார் கேட்கிறோம் என்பது அல்ல. துரதிர்ஷ்ட வசமாக இதை பருவா புரிந்து கொள்ளவில்லையே"—என்றார்.

சம்பளப் பிரச்னையில் தீர்வு காண

மின் தொழிலாளர்கள் 'தர்ணா'

மதுரை, ஜன. 24—

கடந்த 22-ம் தேதி மாநிலம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான மின்வாரியத் தொழிலாளர்கள் தத்தம் அலுவலகங்கள்முன் காலை9 மணிமுதல் மாலை5மணிவரை 'தர்ணா' போராட்டம் நடத்தினர்.

ஊதியப் பிரச்னை குறித்து — தனித்தனியே அழைத்துப் பேசாமல் அனைத்துச் சங்கங்களையும் அழைத்துப் பேசி விரைவில் தீர்வு காணக் கோரியும், குறைந்த பட்ச ஊதியம் 200 புள்ளிக்கு ரூ 350, அதற்கு மேல் ஒருபுள்ளிக்கு ரூ 1-75 பஞ்சப்படி, தற்காலிகத் தொழிலாளர்கள் நிரந்தரம், ஊதிய முடக்கச் சட்டம் வாபஸ் முதலிய கோரிக்கைகளை வற்புறுத்தி, மின் தொழிலாளர் மத்திய அமைப்பின் (சி ஐ டி யூ) அறைகூவலுக்கிணங்க இந்த தர்ணா நடந்தது.

அணைக்கட்டு தொழிலாளர்

மின்சார அணைக்கட்டுத் தொழிலாளர்கள் சார்பில்—மேலாழியாரில் தோழர் கே ரெங்கநாதன் தலைமையிலும், நவமலையில் தோழர் வி துளசிதாசன் தலைமையிலும், மின்பாறையில்தோழர் கே ராமசாமி தலைமையிலும் ஊர்வலங்களாகச் சென்று 'தர்ணா' நடத்தினர்.

தென்னுற்காடு மாவட்டம்

தென்னுற்காடு மாவட்டம் முழுவதிலும் — விழுப்புரம், திண்டிவனம், கள்ளக்குறிச்சி, கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய இடங்களில் உள்ள மேற்பார்வை பொறியாளர் கோட்டப் பொறியாளர் ஆகியோரது அலுவலகங்கள் முன் 'தர்ணா' போராட்டம் நடைபெற்றது. 500 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டுகோரிக்கை முழக்கங்களை எழுப்பினர். மாலையில் பொதுத் தொழிலாளர் சங்கத்தலைவர் தோழர் பத்மநாபன் முடித்து வைத்தார்.

இந்தக் கோரிக்கைப் போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களுக்கு மின்வாரிய அதிகாரிகள் விடுப்புத்தரமறுத்து விட்டனர்.

அதிகாரிகளின் இந்த ஆணவப் போக்குக்குதொழிலாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நெல்லை திட்டத்தில் 500 பேர்

நெல்லை மி[illegible] தில் 12 இடங்க[illegible] நடந்தது. இதில் தொழிலாளர்கள் லகம் முன் நடராஜன், சிவஞானம், சிதம்பரம், குமாரசாமி, சண்முகம் ஆகியோர் தலைமையில் 43 தோழர்கள் கலந்து கொண்டனர். தர்ணாவை காலையில் தோழர் நடராஜன் துவக்கி வைத்தும் தோழர் பி. சி.வேலாயுதம் மாலையில் முடித்துவைத்தும் பேசினர்.

நெல்லை ஜங்ஷன் டி. டி. இ. எஸ், நிறுவன அலுவலக முன்பு தோழர் திருத்துவராஜ் தலைமையில் 25 பேர் தர்ணா நடத்தினர்.

நெல்லை மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் வழக்கறிஞர் தோழர் ஆர் கிருஷ்ணன் துவக்கி வைத்தும், மின் தொழிலாளர் சங்க உதவி தலைவர் தோழர் டி பி வாசுதேவன் முடித்து வைத்தும் பேசினர்.

சுருளியாறு கீழ்முகாம்

சுருளியாறு கீழ் முகாமில், செயற் பொறியாளர் அலுவலகம் முன்பு தோழர் சாரங்கபாணி, தலைமையில் 38 பேர் 'தர்ணா' நடத்தினர்.

கோவில்பட்டி

கோவில்பட்டி மின்வாரிய வருவாய்ப் பிரிவு அலுவலகம் முன்பு தோழர் வி சங்கரன் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் 'தர்ணா' நடத்தினர்.

மாலையில், பி தியாகராஜன் தலைமையில் ஊர்வலமும், அர்ச்சுணன் தலைமையில் பொதுக் கூட்டமும் நடந்தது.

பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள் தோழர்கள் ராமசுப்ரமண்யம், பி தியாகராஜன், சுடலைமுத்து, எஸ் ராஜாமணி, (மின்சாரம்), சக்தி (வாலிபர் முன்னணி) ராமசுப்பு (அச்சு) பி சுப்பையா (இரயில்வே), லெட்சுமணப் பெருமாள் (பஞ்சாலை), ஆ பூ சுப்பையா (சோசலிஸ்ட்), எஸ் வெங்கிடு (மார்க்சிஸ்ட்) ஆகியோர் பேசினர்.

இக்கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரூ 41 ஐ அரியானு மாநில மின் தொழிலாளர் போராட்ட நிதிக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

குடியாத்தம்

இங்குள்ள கோட்ட மின் பொறியாளர் அலுவலகம் முன்பு தோழர் வி ஏ கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 19 பேர் தர்ணா நடத்தினர். பின்னர் நடந்த கூட்டத்தில வி செயராமன், பி ஆனந்தன் பேசினர்.

பாபநாசம்

[illegible]

தெ ஆ மாவட்ட ஊதியமுடக்க எதிர்ப்பு மாநாடு

நெல்லிக்குப்பம், ஜன. 23—

தென்னுற்காடுமாவட்ட ஊதியமுடக்க எதிர்ப்பு கருத்தரங்கு பிப். 9-ந் தேதி நெய்வேலியில நடக்கிறது (ஏற்கனவே பிப்.2-ல் நடப்பதாக இருந்தது ஒத்தி வைக்கப் பட்டது)

இதில், தமிழக சிஐடியூவின் பொதுச் செயலாளர் ஆர். உமாநாத், துணைத் தலைவர் சி. கோவிந்தராஜன் ஆகிய தோழர்கள் மற்றும், மின்வாரியம் ஆயுள் காப்பீட்டுக்கழகம், வங்கி, தபால்-தந்தி, இரயில்வே, டான்சி மற்றும் பல்வேறு தொழிற்சங்க ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர்.

மாலையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கை நடத்திட, கடந்த 12 ந் தேதி நெல்லிக்குப்பத்தில் நடந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில், வரவேற்புக் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அதன் தலைவராக சி. கோவிந்தராஜன், துணைத் தலைவராக கே. எஸ். சம்பந்தம், செயலாளராக எஸ். வீரபத்திரன், துணைச்செயலாளர்களாக ஜானகிராமன், கோவிந்தன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2-ம் பத்தி தொடர்ச்சி)

லாளர்கள் கலந்து கொண்டனர்.

செய்யார்

இங்குள்ள கோட்ட மின் பொறியாளர் அலுவலகம் முன் சங்கக் கிளைச் செயலாளர் எம் எஸ் சங்கரன் தலைமையில் 50 பேர் தர்ணா நடத்தினர். சங்கக் கிளைச் செயலாளர் எம் பெருமாள் துவக்கி வைத்தார்.

என் எஸ் சீனிவாசன், சாகுல் அமீது, பி சின்னத்தம்பி, எஸ் எழுமலை ஆகியோர் கோரிக்கைகளை வற்புறுத்திப் பேசினர்.

மாலையில் எஸ் ராமகிருஷ்ணன் தலைமையில் ஊர்வலமாகப் புறப்பட்டு கட்டுமானத்துறை மூன் கூட்டம் நடந்தது.

பதவி கொடுத்தால் முற்போக்கு, கொடுக்காவிட்டால் பிற்போக்கா?

வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பேராசைக்கு ஆளும் காங்கிரஸ் தலைவர்கள் ஆப்பு

சென்னை, ஜன. 24—

வலது கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கினைப்பற்றி 21—1—75ந் தேதி மதுரை பதிப்பு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் தலையங்கத்தில், மத்திய மந்திரி ஜெகஜீவன்ராம், மேற்கு வங்க முதலமைச்சர் சித்தார்த்த சங்கர்ரே, காங்கிரஸ் தலைவர் பருவா ஆகியோர் கண்டித்திருப்பது [illegible]து குறிப்பிட்டுள்ளது இறுதியில்:

'எக்ஸ்பிரஸ்' இடிக்கிறது

"வலது கம்யூனிஸ்ட் கட்சியானது ஏதோ தீவிர உருவம்போல அடிக்கடி காட்டிக் கொண்டாலும், உண்மையில், ஒரு புரட்சிக் கட்சி என்று உரிமை கொண்டாடி வந்ததை இழந்து விட்டது. பார்லிமெண்டு காரியாதிகளுக்காகவே [illegible]க்கூடிய அல்லது பயன்படக்[illegible] [illegible]ரு சீர்திருத்தவாதக் கட்சியாக [illegible]திதாக மாறிவிட்டது. இந்த நிலை[illegible]க்கு, காங்கிரஸ் கட்சிக்குள் அந்தச் செல்வாக்கு அதன் பலத்தைக் காட்டவில்லை. பதவிப் போட்டி கோஷ்டிகளின் பல்வேறு நோக்கங்களுக்கும் பயன்படுகிறது"- என்றுஎழுதியுள்ளது.

பருவா விரட்டுகிறார்

காங்கிரஸ் தலைவர் பருவா கல்கத்தாவில் 20—1—75-ல் பேசுகையில், வலது கம்யூனிஸ்ட் தலைவர்களின் ஆசைகளைத் தகர்த்தார்.

"கேரளத்தில் வலது கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இதர கட்சிகளுடனும் சேர்ந்து கூட்டணி அரசு அமைத்ததுபோலமேற்கு வங்கம் உட்பட வேறு எந்த மாநிலத்திலும் ஏற்படுத்தமாட்டோம்.

கேரளத்தில் நிலைமையே தனி அப்படிப்பட்ட நிலைமை மேற்கு வங்கத்திலும் இல்லை. வேறு எந்த மாநிலத்திலும் [illegible]இல்லை. காங்கிரசுடன் வலது கம்யூனிஸ்டுகள் ஆசைப்படலாம். ஆனால் காங்கிரஸ் அதை விரும்பவில்லை" —என்று கூறினர்.

சந்திரசேகரும் தாக்குகிறார்

காங்கிரஸ் கட்சிக்குள் முற்போக்குவாதிகள் என்று கூறப்பட்ட இளம் துருக்கர்களில் ஒரு முக்கியஸ்தரான சந்திரசேகர் எம் பி வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பதவி வேட்டைகளைப் பற்றிக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

"காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்படும் கஷ்டங்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, பல்வேறு மாநிலங்களிலும் வியாபாரம் செய்ய வலது கம்யூனிஸ்ட் கட்சி முயற்சிக்கிறது.

இந்தக் க[illegible] இடம் கொடுக்காவிட்டால், க[illegible] பிற்போக்கு என்று தத்துவம் ப[illegible]. கேரளத்தில் அதற்கு ரசை முற்போக்கு என்றுபுகழ்பாடுகிறது

ஆனல் மேற்கு வங்கத்தில் இதற்கு இடம்கிடைக்காததால், காங்கிரஸ் கட்சிக்குள் பிற்போக்கு சக்திகள் ஊடுருவி விட்டன என்று திட்டுகிறது.

மேற்கு வங்க முதலமைச்சர் வலது கம்யூனிஸ்டுகளுக்கு மந்திரி பதவி கொடுக்காததினால்தான் இவ்வாறு திட்டுகிறார்கள்.

இப்போது வலது கம்யூனிஸ்டு கட்சிக்கு பதவி கிடைக்க காங்கிரசின் ஆதரவும உதவியும் கிடைககாது என்பதால், அது மனது உடைந்து கிடக்கிறது. இக்கட்சியானது அரசியல் குயுக்திகள் மூலம் அதிகாரத்துக்கு வரவிருமபுகிறது.

காங்கிரசைப் பலவீனப்படுத்திடவும், பலவீனமான காங்கிரசை வலது கமயூனிஸ்ட் கட்சியின் அரசியல் வித்தைகளில் சிக்க வைத்து, கூட்டணி அரசுக்கு சம்மதிக்க வைக்க வேண்டுமென்பதுதான் இவர்களது தந்திரம். இந்த மாயாஜாலங்கள் ஒன்றும் பலிக்கப் போவதில்லை.

இந்த அரசியல் சூதாடிகள் ஒரு நாளும்புதிய சமூகசிருஷ்டிகர்த்தாக்களாக விளங்க முடியாது சமூகப் புரட்சியின் தூதுவர்கள் என்று பாசாங்கு செய்தாலும் இவர்கள் அப்பட்டமான சந்தர்ப்பவாதிகள் என்று சந்தி சிரிக்கத்தான் போகிறார்

தீக்கதிர்

வறட்சியால் தவிப்போர் மீது காங்.—தி.மு.க. அரசுகளுக்கு அக்கறை உண்டா?

மத்திய உணவுத் துறை அமைச்சர் ஷிண்டே தமிழ் நாட்டில் வறட்சிப் பிரதேசங்களைச் சுற்றிப்பார்த்தார். வறட்சியால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மை யென்றாலும் இவை பற்றிய அறிக்கைகள் மிகைப்படுத்தப் பட்டவைகளாக வருகின்றன என்கிறார்.

மத்திய அரசு ஆய்வுக் குழு ஒன்று டாக்டர் பட்நகர் தலைமையில் வந்து ஆராய்ந்த பின் தமிழகத்திலே வறட்சி நிலைமை மிகைப்படுத்தப்படுகிறது என்று கூறிச் சென்றார்.

தமிழகத்தில் ஆட்சி புரியும் தி மு க அரசின் மீது உள்ள மத்திய காங்கிரஸ் தலைவர்களின் அரசியல் காழ்ப் புணர்ச்சிதான் இதில் பிரதிபலிக்கிறதே தவிர யாதார்த்தமான நிலைமையை அங்கீகரித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி தென்படவில்லை.

இதற்கு துணை புரிவதாகவே தி மு க அரசின் தெளிவற்ற, பொதுப்படையான அறிக்கைகளும் அரசாங்க தலைவர்களின் பேச்சுக்களும் உள்ளன. அமைச்சர்களும், வருவாய்த்துறை அதிகாரிகளும் பஞ்சத்தால் பாதிக்கப் பட்ட மாவட்டங்களுக்குச் சென்று வந்த பின்பும், பொறுப்பான. துல்லியமான விபரங்களை வெளியிட வில்லை. தேவையான அவசர நடவடிக்கைகளை எடுக்கவும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பஞ்ச நிலைமையைப்பற்றி தெளிவான கோரிக்கைகளை முன் வைத்து தமிழகம் முழுவதும் மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளது. தமிழகத்திலுள்ள பல எதிர்க்கட்சிகளும் பல விபரங்களை வெளியிட்டுள்ளன. பட்டினிச் சாவுகள் பல நிகழ்ந்துள்ளன. அந்தச் சாவுகள் வயிற்றுப் போக்கின் விளைவு என்று கூறி அந்தக் கொடுமையை மூடிமறைப்பதற்கு ஆட்சியாளர்கள் சாகசங்கள் பல புரிகின்றார்கள். 'சுத்தத் தமிழன்' ஆட்சியில் பட்டினிச் சாவு நடக்காது என்று சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமையா? உண்மையை மறுத்து விட்டதால், அது இல்லை என்றாகி விடுமா?

இராமநாதபுரம் மாவட்டம் முழுவதிலிருந்தும் அண்டை மாவட்டங்களுக்கு குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திற்கு பஞ்சம்- பிழைப்பதற்காகப் பானைகளுடன் வண்டி மாடுகளுடன், தலைச் சுமைகளுடன் நன்றாக வாழ்ந்த எண்ணற்றகுடும்பங்களுள்பலலட்சக்கணக்கானோர்நடந்தும் ரயிலிலும், பஸ்ஸிலும் சென்று குவிந்து வருகின்றனர். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ரயில் நிலையத்திலும், பஸ் நிலையத்திலும் இந்தக் கோரக் காட்சி, காண்போர் உள்ளத்தை உருக்குகிறது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வாறு அந்த மாவட்டத்திற்குள் புகுந்துள்ளதால் அங்குள்ள தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய வேலைக்கும், வருவாய்க்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல. அந்த மாவட்டத்திற்குள் புகுந்துள்ள பெரும்பான்மையான மக்கள் கடுமையான குளிரில இருக்க இடமுமில்லாமல் சாலையோரங்களில் கும்பல் கும்பலாக குந்தியிருக்கும் காட்சி பயங்கரமாக உள்ளது. இதற்கு இரையானோர் பலர்.

இதே போல் தர்மபுரி, அரூர் இன்னும் பல சேலம் தாலுகாக்களிலிருந்தும் அண்டை மாவட்டங்களுக்குக் குடி பெயர்ந்து போகிறார்கள். புதுக்கோட்டை, கோவை, மதுரை மாவட்டங்களும் தஞ்சை தாலுகாவில் ஒருபகுதியும், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தஞ்சையிலும், ஏனைய பகுதியிலும் சம்பா சாகுபடி விளைச்சல் போதிய மழை இல்லாத காரணத்தால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. 40 சதவீதம் கிடைத்தாலே அதிகம்.

இவ்வாறு, லட்சக்கணக்கான மக்கள் வறட்சியினாலும், உணவு விலை உயர்வாலும் பாதிக்கப்பட்டு ஊர் விட்டு வேற்றூர் சென்று நடுத்தெருவில்தவித்துக்கொண்டு இருக்கும் பொழுது, அரசாங்க அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு தி மு க தலைவர்கள் நிலைமையைச் சமாளிக்கதேவையான நடவடிக்கையெடுத்தார்களா? தவறி விட்டார்கள்.

மத்திய அரசும் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து வறட்சி நிலைமையை சமாளிப்பதற்கு அவசர உதவி செய்ய முன்வரவில்லை. மேலும் 25 ஆயிரம் டன் கோதுமை தரப்போவதாக திருவாளர் ஷிண்டே, தம்முடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டபோது 'தயாள' சிந்தனையுடன் அறிவித்தார்!

இன்று எழுந்துள்ள கடுமையான இந்தப்பிரச்னைக்கு இந்தச்சொற்ப உதவி அறிவிப்பு தக்க தீர்வு கண்டு விடுமென்றுகருதுகிறாரா?

வறட்சியால் வேலையில்லாமல் தவிப்போருக்காக இன்று மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன?

— மலிவு விலையில் உணவு வழங்கவேண்டும்.

— இதற்காக கட்டாயக் கொள்முதல் செய்ய வேண்டும்.

— பஞ்சப் பிரதேசம் எவை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து, பஞ்ச நிவாரண வேலைகளில் அரசாங்க எந்திரம்முழுவதையும முடுக்கிவிடவேண்டும். இதன அடிப்படையில் மத்திய அரசிடம உதவி கோரவேண்டும். இதை தமிழக அரசு, தன்னுடைய உடனடிப் பணியாக மேற்கொள்ளத் தவறினல் அடுத்து வரும் சில வாரங்களில் ஆயிரக்கணக்கானோர் பட்டினியால் சாகும் நிலைமை தான் ஏற்படப்போகிறது என எச்சரிக்கிறோம்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உணவு கொடுக்கவேண்டுமானல் கொள்முதல் செய்யாமல் முடியாது; நடக்காது. இதற்கு சர்வ கட்சிகளின் உதவி தேவை. நிலப்பிரபுக்களிடம் கொள்முதல் என்றாலே தி மு க அரசு நடுங்குகிறது. சம்பா அறுவடை துவங்கிவிட்டது. கொள்முதலுக்கு முறையான ஏற்பாடு எதுவுமே செய்யப்படவில்லை. கொள்முதல் முறையாகச் செய்தால் மத்தியரசின் உதவியையும, ஆந்திர, கர்னடக அரசுகளின் உதவிகளையும் பயன்படுத்தி வறட்சி நிலைமையைச் சமாளிக்க முடியும்.

நிலைமையைசமாளிக்க சர்வகட்சிகளையும் கொண்ட பஞ்ச நிவாரண குழுக்களையும், கொள்முதல் ஆலோசனைக் குழுக்களையும் அமைத்தால் அதிகாரிகளின் லஞ்ச ஊழல்களை தடுப்பதுடன பிரச்சனையைத் துரிதமாகத் தீர்க்க முடியும், ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் சாவதிலிருந்து தடுக்க முடியும்.

விலைவாசிக் கொடுமை வறட்சியால் அல்லலுறும் மக்களுக்கு நிவாரணம் கோரி

கைக் குழந்தைகளுடன் பெண்கள் மறியல்

மதுரை, ஜன. 24—

தமிழகம் முழுவதும்-நகரப்பகுதிகளிலும் கிராமப் புறங்களிலும்—கட்டாய ரேஷன் மூலம் அனைவருக்கும் மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்கக் கோரியும், 10 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்களிடம் உபரி நெல் முழுவதையும் கட்டாயக் கொள்முதல் செய்யக் கோரியும் வறட்சிப்பகுதிகளில் உடனடி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி வற்புறுத்தியும்,

இதற்குத் தேவையான உதவிகளை மாநில அரசுக்கு மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றுகோரியும் கடந்த 20-ந் தேதியன்று மாநிலம் முழுவதும் மறியல் நடந்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - ஜனநாயக மாதர் சங்கம் - சி ஐ டி யூ- விவசாயிகள் - விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்கள் வாலிபர் முன்னணி - மாணவர் சங்கம் ஆகிய அமைப்புக்களைச்சார்ந்த ஆயிரக்கணக்கான தோழர்கள்-விலைவாசி உயர்வாலும் வறட்சியாலும் அல்லலுறும் மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கக்கோரும் முழக்கங்களை எழுப்பிக் கொண்டு ஊர்வலமாகச் சென்று மத்திய—மாநில அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் செய்து கைதாயினர்.

கைக் குழந்தைகளுடன் 5 வாசல்களிலும் மறியல்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் தாசில்தார் அலுவலகம் முன்பு வட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் தோழர் ஆர் ரெங்கநாதன் தலைமையில் நடந்த மறியலில், 12 கைக் குழந்தைகளுடன் 23 தாய்மார்களும், 65 விவசாயத் தொழிலாளர்களும் உட்பட 100பேர் கலந்து கொண்டனர்.

தாசில்தார் ஆபீசின் 5 வாசல்கள முன்பும் மறியல் செய்து அனைவரும் கைதாயினர்.

முன்னதாக ஆண்கள் உயர்நிலைப்பள்ளியிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் பி தர்மலிங்கம், வட்டச் செயலாளர் பி ராஜு, விவசாயிகள் சங்கத் தலைவர் ஆர் பி ராமசாமி ஆகிய தோழர்கள் தலைமையில் புறப்பட்டது.

அரூரில்

அரூரில், சேலம் - தர்மபுரி மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் கே துரைச்சாமி, மாதர் சங்கத் தலைவி கருப்பியம்மாள், லேபர் யூனியன் செயலாளர் எம் அண்ணமலை, பி ஆதிமூலம், ஜி இஸ்மாயில், எஸ் எம் கண்ணன், சிங்காரம் ஆகியோர் உட்பட திரளானோர் காலனியிலிருந்து ஊர்வலமாக வந்து—தாலுகா அலுவலகம் முன்பு 25 பெண்கள் உட்பட 60 பேர் மறியல் செய்தனர்.

இதில் பாப்பிரெட்டிபட்டி, தொப்பம்பட்டி, நவலை, பரையபட்டி, கவுண்டம்பட்டி, கூத்தாடிப்பட்டி, ஈட்டியம்பட்டி, சக்கிலிபட்டி. அரூர், சோட்டப்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து வந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஊர்வலத்தை வட்டச் செயலாளர் தோழர் எம். வேடியப்பன் துவக்கிவைத்தார்.

உடுமலை

கட்சியின் அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் டி, பி. முகதுச்சாமி தலைமையில் 31 தோழர்கள் தாலுகா அலுவலகம் முன்பும்—

தாலுகா குழு உறுப்பினர் தோழர் என். ராஜு தலைமையில் 20 பேர் மத்திய அஞ்சலகம் முன்பும் மறியல் செய்து கைதாயினர்.

தாராபுரத்தில்

இங்குள்ளதாலுகா அலுவலகம் முன்பும், அஞ்சலகம் முன்பும் தோழர் பி. நாச்சி முத்துதலைமையில் 33பேரும்,

ஜனநாயக மாதர் சங்கத்தின் கிளைச் செயலாளர் தோழர் கமலம் தலைமையில் கைக்குழந்தைகளும்15மாதர்களும் மறியல் செய்து கைதாயினர்.

மணப்பாறையில்

திருச்சி மாவட்டம் மணப்பாறையில், தாசில்தார் அலுவலகம் முன்பு தோழர் டி. எம். ஜக்கரியா தலைமையில் திரளான தோழர்கள் மறியல்செய்துகைதாயினர்.

மண்ணச்சநல்லூர்

திருச்சியை அடுத்த மண்ணச்சநல்லூரில், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் முன், கட்சியின் வட்டாரச் செயலாளர் தோழர் செ. முத்தையா, பி.விருத்தாசலம் எம்.பி. சுப்ரமண்யம் உட்பட 9 தோழர்கள் அலுவலகத்தின் இரு வாசல்கள்முன்பும் மறியல்செய்துகைதாயினர்.

முன்னதாக முக்கிய வீதிகள் வழியேஊர்வலமாக புறப்பட்டுவந்து அஞ்சலகம் முன்புஆர்ப்பாட்டம் செய்து விட்டு—பின்னர் மறியல் நடத்தினர்.

முகவைமாவட்டம்திருப்பத்தூரில் தலைமை அஞ்சலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தபின், கட்சியின்தாலுகாச் செயலாளர் தோழர் மு காசிநாதன் தலைமையில் 16 தோழர்கள் தாலுகா அலுவலகம் முன்பு மறியல் செய்து கைதாயினர்.

மலிவு தானியக் கடைகள் கோரி ஜன. 20-ல் சிவகிரியில் நடந்த மறியல்

கால்கடுக்க 6மைல் நடந்துவந்து மழையில் நனைந்துகொண்டே...

நமனசமுத்திரத்திலிருந்து திருமயத்துக்கு6மைல் தூரம் வரை கால்கடுக்க நடந்தே வந்து—தாலுகா ஆபீஸ் முன்பு, மழைபெய்துகொண்டிருந்த போதிலும் நனைந்து கொண்டே 14 பெண்கள் உள்பட 50 பேர் மறியல் செய்தனர். இந்த போராட்டத்துக்கு தோழர் எஸ்.சுப்ரமண்யம் தலைமை வகித்தார்.

கடலூரில் 125 பெண்கள்

தென்னாற்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வாயிலில் 125 பெண்கள் உள்பட 325 பேர் மறியல் செய்து கைதாயினர்.

முன்னதாக கட்சியின் மாவட்டக் குழு அலுவலகத்திலிருந்து மாவட்ட செயலாளர் தோழர் எஸ்.நடராஜன் ஜனநாயக மாதர் சங்கத் தலைவர் தோழர் ஷாஜாதி கோவிந்தராஜன் ஆகியோர் தலைமையில் 500-க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் புறப்பட்டது.

மேலூர் தாலுகா

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவில் 3இடங்களில் மறியல் நடந்தது.

மேலூர் தாசில்தார் அலுவலகம் முன்பு தோழர்கள் மு.அழகர்தாஸ். கி. ராமசாமி தலைமையில் 81 தோழர்களும்,

தும்பைப்பட்டி அஞ்சல் நிலையம் முன்பு தோழர் மு அய்பாவு தலைமையில் 17 தோழர்களும்,

நத்தத்தில் 7 தோழர்களும் மறியல் செய்துகைது செய்யப்பட்டனர்.

திருமங்கலம் தாலுகா

திருமங்கலம் தாலுகாவில் 3 இடங்களில் மறியல் நடந்தது.

பேரையூரில் அஞ்சலகம் முன்பு விவசாய சங்க தாலுகா கமிட்டி உறுப்பினர் டி எஸ் வெள்ளைச்சாமி, ஐ. முனியாண்டி தலைமையில் 19 பேரும்,

திருமங்கலத்தில்—எஸ். எம். நாகையசாமி தலைமையில் தாலுகா அலுவலகம் முன்பு 22 பேரும்,

கல்லுப்பட்டியில் — கட்சியின் தாலுகாக்குழு உறுப்பினர் அய்யாவு தலைமையில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் முன்பு 34 பேரும் மறியல் செய்து கைதாயினர்.

செங்கோட்டை,அம்பை

செங்கோட்டை தாலுகா ஆய்க்குடியில் எம். ராஜாங்கம், பரமசிவன் ஆகியோர் தலைமையில் 13 பேர் மறியல் செய்து கைதாயினர்.

தென்காசி தாலுகா கடையநல்லூரில் மாதர் சங்க தலைவர்கள் சரஸ்வதி அய்யாவு, கிருஷ்ணம்மாள் ஆகியோர் தலைமையில் 13 பேர் மறியல் செய்து கைதாயினர்.

தஞ்சை

தஞ்சை மாவட்டம் வேதாரண்யத்தில் அஞ்சல் நிலையம், துணைத் தாசில்தார் அலுவலகங்கள்முன்8பெண்கள் உட்பட 62பேரும்

நன்னிலத்தில் தோழர்கே. எஸ். பக்கிரிசாமி தலைமையில் தாசில்தார் அலுவலக முன் 65பேரும்

கந்தர்வகோட்டையில் 31 பேரும் மறியல் செய்து கைதாயினர்.

ஒவ்வொரு இடத்திலும் மறியல் தோழர்கள் ஊர்வலமாகச் சென்ற சமயத்திலும் மறியல் செய்து கைதான சமயத்திலும்—மக்களது அத்தியாவசிய — அடிப்படைப் பிரச்சனைகளை முன்வைத்து நடக்கும் பொதுமக்கள் போராட்டம் ஆகையால் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் குழுமிநின்று வாழ்த்துக் கூறினர்.

அனைவரும் விடுதலை

தமிழகம் முழுவதும் 20-ந் தேதி மறியலில் கைது செய்யப்பட்ட அனைத்துத் தோழர்களும் அன்றே விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

ரயிலைக் கவிழ்க்க சதி செய்ததாக

இரயில்வே தொழிலாளர் மீது போலீஸ்பொய்வழக்கு தள்ளுபடி

சேலம், ஜன. 24—

கடந்த ஆண்டு நடந்த இரயில்வேத் தொழிலாளர்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தினை யொட்டி ரயில்வே தொழிலாளர்களான இங்காசிமுத்து, பெருமாள், பழனியப்பன் ஆகிய 3 தோழர்கள் மீதும் போலீசார் தொடுத்திருந்த பொய் வழக்கு தள்ளுபடி ஆனது.

கடந்த ஆண்டு மேமாதம் 8ந் தேதியன்று நள்ளிரவு 12மணியளவில் ரயில்வே காலனியில் இருந்த தத்தம் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த இம்மூன்று தோழர்களையும்—போலீசார் அத்துமீறி வீடுகளுக்குள் புகுந்து கைது செய்தனர்.

ரயிலைக்கவிழ்க்கதண்டவாளத்தில் பெரும் பாறையை வைத்ததாகவும் நாச வேலையில் ஈடுபட்டதாகவும் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கை விசாரித்த கிருஷ்ணகிரி செசன்ஸ் நீதிபதி இம்மூவரும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு கூறி, வழக்கை கடந்த 17ந் தேதி தள்ளுபடி செய்தார்.

விடுதலை ஆகி வெளியே வந்த 3 தோழர்களுக்கும் திரளான தோழர்கள் செங்நிறத் துண்டுகள் மாலைகள் அணிவித்து வரவேற்றனர். 18ந் தேதி காலை திருப்பத்தூரிலிருந்து சூரமங்கலம் வரை ரயிலில் வந்த இத்தோழர்களுக்கு ஒவ்வொரு ரயில்வே நிலையத்திலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சி.ஐ.டி.யூ.-க்கு நன்றி

இறுதியில சேலம்மாவட்ட சி.ஐ.டி.யூ. அலுவலகத்திற்கு அம்மூவரும் வந்து தோழர் கே.எஸ்.அர்த்தநாரியைச் சந்தித்து, போராட்டத்தின் போதும், வழக்கு நடத்துவதற்கும் சிஐடியூ சங்கங்கள் [illegible] சகோதர உதவிகளுக்கு நன்றி தெரிவித்தனர்.

வழக்கை நடத்துவதற்காக மாவட்ட சி.ஐ.டி யூ. மையத்தின் சார்பில்ரூ 300ம் மாக்னசைட் தொழிலாளர்கள் சார்பில் ஒரு மூடை நெல்லும் வசூல் செய்து உதவி செய்தனர்.

விமான ஊழியர்கள் குமுறல்

புதுடெல்லி, ஜன, 24—

விமானப் போக்குவரத்து தொழில்களில் தொழிற்சங்க ஊழியர்களை பழிவாங்கும் போக்குகளை நிறுத்தாவிட்டால், இந்திய விமானப் போக்கு வரத்து ஸ்தாபனங்களான இண்டியன் ஏர்லைனிலும், ஏர் இந்தியாவிலும் வேலைநிறுத்தம்ஏற்படும் எனவிமானப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் சங்கம் நிர்வாகங்களை எச்சரித்துள்ளது.

அச்சங்கத்தின்பொதுச் செ[illegible]ளர் விடுத்துள்ள அ[illegible]யில் மேற்கண்ட எச்[illegible] விடப்பட்டுள்ளது.

இ ந் தி[illegible] விமான ஓட்டிகள் சங்கம், இந்திய விமான தொழில் நுணுக்கவாதிகள் சங்கம், இந்திய விமான ஊழியர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் ஏற்கனவே தண்டிக்கப்பட்டுள்ளனர். அத்தண்டனைகள் நீக்கப்படவேண்டும் என்றும் அவ்வறிக்கை கோருகிறது.

ஏர் இந்தியாவிலும், இந்தியன் ஏர்லைன்சிலும் நிர்வாகத்தினரால் தொழிற் சங்க நிர்வாகிகள் பழிவாங்கப்பட்டிருப்பது கடந்த 20 வருடமாக தொழிலாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற் சங்க [illegible] முறைகளுக்கு விடப்பட்ட மிரட்டலாகும் என்றும் அவ்வறிக்கைக் கூறுகிற[illegible]

"தேசாபிமானி" மீதான வழக்கை வாபஸ் பெறுக

ஏ.கே.ஜி. வலியுறுத்தல்

கோட்டயம், ஜன.24—

கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மலையாள நாளிதழான "தேசாபிமானி" மீது கேரள அரசு தொடுத்துள்ளவழக்கை வாபஸ்பெற வேண்டுமென்று, தோழர் ஏ.கே. கோபாலன் கோரியுள்ளார்.

காங்கிரஸ் காட்டுஇலாகா அமைச்சர் அடியோடியின் ஊழலை வெளியிட்ட "கேரள கௌமுதி" என்னும் நாளிதழ் மீது கேரள அரசுவழக்கு போட்டது. பிறகு வாபஸ் பெற்றுக்கொண்டது.

ஆனல், மாநிலத்தின் இன்னெரு அமைச்சரின் ஊழல் பற்றி செய்தி வெளியிட்ட "தேசாபிமானி" மீதுபோடப்பட்டவழக்கைமட்டும் அரசு வாபஸ் பெறவில்லை.

இது குறித்து தோழர் ஏ. கே. ஜி. சென்ற 20-ம் தேதியன்று பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அவர் மேலும் கூறியதாவது:

"கேரள கௌமுதி"க்கு எதிரான வழக்கை வாபஸ் பெற்றதுபோலவே, "தேசாபிமானி"க்கு எதிரான வழக்கையும் அரசு வாபஸ் பெற வேண்டும்.

"கேரள கௌமுதி"க்கு எதிரான வழக்கு குறித்து ஒரு நிலைபாடும் "தேசாபிமானி"க்கு எதிரான வழக்கு குறித்துவேறொரு நிலைபாடும் அரசு மேற்கொள்வது சரியல்ல.

அவர் மேலும் கூறியதாவது:

இந்திய ஆட்சியாளர்கள் உறுதியளித்துள்ள அடிப்படை உரிமைகளெல்லாம், வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளன.

வேலைநிறுத்தம் நடக்கும் இடங்களில் இராணுவத்தை நியமிப்பது, ஒரு பாசிஸ்ட் முறையேயாகும்.

ரயில்வே தொழிலாளர் போராட்டத்தின் போதும் துறைமுகத் தொழிலாளர் போராட்டத்தின்போதும் — அந்தப் போராட்டங்களைத் தோல்வியுறச் செய்வதற்காக இராணுவம் நியமிக்கப் பட்டது.

காங்கிரஸ் கட்சிக்குள் கலகங்கள் அசாம்-ஆந்திராவில் குடுமிபிடி

புதுடெல்லி, ஜன. 24—

காங்கிரஸ் கட்சிக்குள் கலகம் வளர்ந்து வருகிறது. மத்திய ஆட்சியில் அதிகாரங்களையும், பணத்தையும் குவித்துக் கொண்டுள்ள காங்கிரஸ் அரசினர், அதை ஏகபோக முதலாளிகளின் இஷ்டப்படி, அவர்கள் விரும்பும் இடங்களில் தொழில்கள் அமைப்பதும், பின்தங்கிய மாநிலங்களைக் கவனிக்க மறுப்பதுமாக இருக்கிறார்கள்.

இதனல் காங்கிரஸ் கட்சிக்குள்ளே பெரும் கோபதாபங்கள் ஏற்பட்டு கலகம் வெடிக்கிறது.

அசாமில்

அசாமில் 600க்கு மேற்பட்ட முக்கியமான காங்கிரஸ் புள்ளிகள், சிப்சாகர் நகரில் கன்வென்ஷன் நடத்தி ஓர் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

உணவு நிலைமை படுமோசமாக ஆனதற்கு மாநில அரசே காரணமென்றும்—எண்ணெய் வளமிக்க அசாமில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவ வேண்டுமென்றும் — மாநில காங்கிரஸ் தலைமையை மாற்றி அமைக்க வேண்டுமென்றும்—இல்லாவிட்டால் காங்கிரஸ் கட்சிக்கே முழுக்குப்போட்டுவிடப் போவதாகவும் எச்சரித்து கலகக் கொடி தூக்கியிருக்கிறார்கள்.

ஆந்திராவி[illegible]

ஆந்திர மாநிலத்திலும் கோஷ்டி பூசல்கள் வெடித்துள்ளன.

பி. வி. சவுத்திரி, ஐ. ஓபையா என்ற இரு எம். எல். ஏ.க்கள், ஆந்திர முதலமைச்சருக்கும், ஆந்திர மாநில[illegible]கிரஸ் தலைவருக்கும்[illegible] ருக்கு எதிராக வேலை செய்தார்கள் என்று குற்றம் சாட்டி, ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவரும், ஆந்திர முதலமைச்சரும் நோட்டீஸ் அனுப்பினார்கள்.

அவ[illegible]

தொகு[illegible]

நேரில் ஆஜராகி பதில் அளிக்[illegible]று அந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்[illegible]ருந்தது. அதன்படி அவர்கள் பார்க்கவில்லை.

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாக அடுத்தநோட்டீஸ்விட்டார் முதலமைச்சர்.

இதைக்கண்ட விஜய பாஸ்கரரெட்டி என்ற முன்னாள் நிதியமைச்சரும், [illegible]வருடன் முக்கியமான 25 காங்கிரஸ் எம்.எல். ஏ. க்களும் ஆத்திரமுற்றனர்.

"முதலமைச்சரையும் மாநில காங்கிரஸ் தலைவரையும் பார்த்துப் பேசாதது ஒரு குற்றமா? இதற்கு ஒரு ஒழுங்கு நடவடிக்கையா? இந்தக் காட்டு தர்பாருக்கு தலைவணங்க முடியாது"— என்று கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்ல விவகாரம். ச[illegible]நாயகர் தேர்தல் வந்தது. முதலமைச்[illegible] ஒரு வேட்பாளரை நிறுத்தி வைத்தார்.

மொத்தமுள்ள 308 எம். எல். ஏ. க்களில் ஒரு 65 எம். எல். ஏ.க்கள் தனியாக பிரிந்து, போட்டி வேட்பாளரை நிறுத்துவதாக அறிக்கை விடுத்தனர்.

சட்டசபை காங்கிரஸ் கட்சியைக் கூட்டி, ஜனநாயக முறையில் வேட்பாளரை நிறுத்தாமல், தான்தோன்றித்தனமாக முதலமைச்சர் வேட்பாளரை நிறுத்தியதைக் கண்டித்தும், இது தங்களது ஜனநாய[illegible]களைப் பறி[illegible] உள்ளது [illegible]கள் அறிக்கை விட்டிருக்[illegible]

ஆந்திரா [illegible]

இந்திய கமயூனிஸட் க[illegible] (மார்கசிஸ்ட) தமிழ் மாநிலக் குழு சார்பில் தீக்கதிர் அச்சகத்தில் (6/16 பைபாஸ் ரோடு, மதுரை,6250[illegible]) அச்சி[illegible] வெளியிடுபவ[illegible] ஆசி[illegible]